நினைக்கிறேன். இங்கு இருந்தாலாவது அவருக்கு பலவித காரியங்களை நான் செய்து கொண்டிருப்பேன். பொதுக் காரியங்களை. அவர் கேட்கின்ற பொதுவான கோரிக்கைகளை நான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. பொதுவான கோரிக்கைகளைத் தருகின்றபோது அவர் தொகுதிக்கு பல வேலைகளைச் செய்யமுடியும். ஆகவே என்னை அங்கே அனுப்பி வைப்பதிலே அவருக்கு என்ன ஆனந்தம் என்று தெரியவில்லை. பொதுவாக அந்த ஒப்பந்தம் போட்ட பிறகு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று மின்சார வாரியத்திற்கும், நம்முடைய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் டிசம்பர் *1994* ஆம் ஆண்டு சென்ட்ரல் எலக்ரிக் அத்தாரிட்டி அவர்களுக்கு, அதாவது மைய அரசினுடைய மின் நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். 'பவர் பர்ச்சேஸ் அக்ரீமென்ட்' என்று சொல்லப்படுகின்ற அந்த ஒப்பந்தத்தை ஃபைனலைஸ் செய்வதற்காக சட்டத்துறையிலே கலந்தாலோசித்து, சில விதிமுறைகளை எல்லாம் திருத்தி எப்படி அதை ஒழுங்குபடுத்த வேண்டுமோ அதற்கான பணிகளிலே சட்டத்துறை ஈடுபட்டிருக்கிறது. ஆகவே அதற்கு முனைப்பான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே இந்தத் திட்டப் பணிகளை முறைப்படி நிறைவேற்றியதற்குப் பின்னால், அதற்குப் பிறகு அதற்கான சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நான் அங்கு செல்ல வேண்டுமென்று நினைத்தால் போகலாமே தவிர, இப்போது போக வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *226*, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

226—

கருமேனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

34338*—திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 5]

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி–படுக்கப்பத்து சாலையில், உதிரமாடன்குடியிருப்பு கருமேனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் *10-20*

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று ஒரு காலத்திலே சொன்னார்கள். ஆனால் தமிழன் எல்லாம் தலை குனிந்து நடந்த காலம் போக இன்றைக்கு 6 கோடி தமிழ் மக்களையும் தலை நிமிரச் செய்கின்ற நம்முடைய தானைத் தலைவியாம் புரட்சித் தலைவியினுடைய புனித பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் கேள்விகளை நான் தொடுக்கின்றேன். மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் உடன்குடி ஒரு பெரிய வியாபாரஸ்தலம் ஆகும். இந்த வியாபாரஸ்தலத்திற்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வணிகம் செய்வதற்கும் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வதற்கும் உடன்குடி வருகிறார்கள். அந்த உடன்குடியிலேயிருந்து கன்னியாகுமரி, பெரியவிளை, உதரமாடன் குடியிருப்பு போன்ற இடங்களுக்கு போவதற்கு உள்ள இது பெரிய சாலையாகும். இடையில் உதரமாடன் குடியிருப்புக்கு அருகே கருமேனி ஆறு ஒன்று குறுக்கிடுகிறது. அந்த கருமேனி ஆறு குறுக்கிடுகிற காரணத்தாலும், அந்த கருமேனி ஆற்றில் மழை காலத்தில் பெரிய வெள்ளமாக வந்து தரை மட்டத்தில் போடப்பட்டிருக்கிற அந்த சாலையை அரித்துக் கொண்டு போய் விடுகிறது. அதனாலே 3 மாத காலம் அந்தப் பகுதியிலே பேருந்துகள் போக முடியாமல், அந்த பகுதியிலே இருக்கிற மக்கள் உடன்குடிக்கு வர முடியாமலும், கன்னியாகுமரிக்கு போக முடியாமலும் பெரிய விளைக்கு போக முடியாமலும் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் 3 மாத காலம் அவர்கள் தொழில் செய்ய முடியாமலும், வியாபாரங்கள் செய்ய முடியாமலும், தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்க

முடியாமலும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அந்த நிலையை மாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே அதை ஒரு சிறிய பாலமாக கட்டித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு துறையின் சார்பிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தான் உடனடியாக இந்தப் பாலத்தினுடைய பணிகளை எடுத்துச் செய்வதற்கு இயலவில்லை என்பதை தெரிவித்தேன். ஆகவே எதிர் காலத்தில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து ஒருதரைப்பாலம் அமைக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காரியத்தை மேற்கொள்ளும்போது, அதை செய்து முடிக்க வேண்டும் என்ற வல்லமையை படைத்தவர் என்பதை எல்லோரும் அறிவோம். ஆகவே நாங்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற ஒரு குறையைச் சொல்லுகிறோம் என்று சொன்னால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய எண்ணங்களை புரிந்து தெரிந்து தான் அதைச் சொல்லுகின்றோம். 50 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்கிற அந்தப் பாலத்தை எப்படியாவது நீங்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது இதற்கான திட்டங்களை உருவாக்கி எங்களுடைய பகுதி மக்களுடைய குறைகளை நீக்குவதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இது சம்பந்தமாக பலமுறை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். பாலங்களை கட்டுகின்ற பொழுது பகுதி-2 திட்டத்தின் கீழும் சரி, அரசு திட்டப் பணிகளின்படி நிதி ஒதுக்கீடு செய்கிற பணிகளானாலும் சரி, நாம் பாலங்களை கணக்கு எடுத்து செயல்படுத்துகின்ற நேரத்திலேயும் சரி, முன் உரிமை அடிப்படையிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற பகுதிகளிலே இருக்கிற பாலங்களுக்குத்தான் முன்உரிமை கொடுத்து கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆகவே நிதி ஆதாரம் குறைவாக் இருக்கிற காரணத்தினாலும் தான் இது போன்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த

1995 ஏப்ரல் 5]

அடிப்படையிலேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன். இந்தச் சாலை நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்படுகின்ற இதர மாவட்ட சாலை என்பதையும் நான் அறிவேன். ஆகவே இங்கே பாலம் கட்ட வேண்டியது அவசியம் என்று அரசு கருதுகிறது. இருந்தாலும் ஒரு பெரும் தொகை வேண்டியிருக்கிற காரணத்தால்தான் நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் தெரிவித்தேன். வேண்டுமானால் அடுத்த நிதி ஆண்டு இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 227, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

227—

நகப்பாளையத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுதல்

33877—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள 250 வீடுகளை, குடிசை மாற்று வாரியம் ஏற்று அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இந்த மூன்று கருத்துக்களையும் முத்தாய்ப்பாக கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாராட்டக் கூடிய தலைவியாக, பார் புகழும் உத்தம தலைவியாக, பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிற புண்ணியத் தலைவியின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னாலும் கூட